**தலைப்பு 24 – தேசிய பெறுகை ஆணைக்குழு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தேசிய பெறுகை ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தேசிய பெறுகை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய பெறுகை ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 10 செலவின விடயங்களுக்கான ஆரம்ப செலவின மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீடு ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடு ஆரம்ப செலவின மதிப்பீட்டின் சதவீதமாக 30 முதல் 257 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. | மதிப்பீடுகளை இயலுமானவரை சரியானதாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்களுக்காக புதிய பதவியணியினரை ஆட்சேர்த்தமை, பிரயாணச் செலவினம், கூடுதலான எழுதுகருவி தேவைப்பாடுகள் தோன்றியமை, ஏனைய வழங்கலுக்காக செலவின தேவைப்பாடு அதிகரித்தமை, வாகனங்களின் அவசர திருத்தம், செயற்பாட்டு குத்தகைஇடைநிறுத்தம், அரச உத்தியோகத்தர்களுக்கான சலுகை கடன் அடிப்படையின் கீழ் ஆதனங்கள் கொள்வனவு வாகனங்களுக்காக நிதிக் குத்தகை கொடுப்பனவு, நிதிஏற்பாடு 2019 வரவு செலவுத் திட்டத்திற்கு உட்படுத்த முடியாமை போன்ற விடயங்கள் காரணங்களாக இருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டில் 08 செலவின விடயங்களுக்கான ஒதுக்கீடு செய்த ரூபா 23 மில்லியன் நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு ரூபா 16 மில்லியனாக இருநதமையால் சேமிப்புக்கள் 7 மில்லியனாகும். அச்சேமிப்புக்கள் செலவின விடயங்களின் தேறிய நிதி ஏற்பாட்டிற்கு ஒப்பாக 23 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் நிலவின. | மதிப்பீடுகளை இயலுமானவரை சரியானதாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரயாண செலவின தேவைப்பாடு குறைவடைந்தமை, வெளிநாட்டு பிரயாணத்திற்காக சமூகமளித்தமை, இயந்திர உபகரணங்களின் உத்தரவாதக் காலம் காணப்படுகின்றமை, வாகனப் படிகள் கொடுப்பனவிற்கு முன்வைக்கப்படாமை, சிக்கனம், செயற்பாட்டுக் குத்தகை முறைமை இடை நிறுத்தப்பட்டமை மாடிகளில் உள்ளக வேறாக்கல், கொள்வனவு அளவு திருத்தம் போன்றவை காரணங்களாக இருந்தன. |

**2.2 எல்லைகள் மிகைத்தமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம் முற்பண செயற்பாடு களுக்காக விதிக்கப்பட்டிருந்த எல்லைகளான செலவினங்களின் உயர் எல்லை ரூபா 1,200,000 ஆகவும், வரவு மீதிகளின் உயர் எல்லை ரூபா 3,000,000 ஆக இருந்ததுடன் அதற்குரிய உள்ளவாறான பெறுமதிகள் முறையே ரூபா 2,266,762 மற்றும் ரூபா 3,287,856 ஆக இருந்த காரணத்தினால் எல்லைகள் மீறல் முறையே ரூபா 1,066,762 மற்றும் ரூபா 287,856 ஆக இருந்தது. மேலும் நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ 5 மாதிரியில் இந்த உயர் எல்லை பெறுமதிகள் முறையே ரூபா 2,100,000 எனவும் ரூபா 4,000,000 எனவும் பதிவு செய்யப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தில் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். இந்த எல்லைகைகள் திருதத்திற்காக அமைச்சரவை திருத்தமொன்று சனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 03 செலவின விடயங்கள் தொடர்பாக ரூபா 88,776 தொகையான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுகள் குறிப்பு இலக்கம் (iv) இல் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுகள் ஊடாக பொறுப்புக்கள் அனைத்தும் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பொறுப்புக்கள் மற்றும் ஒப்பீடுகளுடன் இணங்குகின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கு மற்றும் செயற்பணி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அரச நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்படும் பொருட்கள், பணிகள் மற்றும் சேவைகள், தகவல்கள் கட்டமைப்பு பெறுகைக்காக நியாயமான பக்கசார்பற்ற மற்றும் வெளிப்படையான மற்றும் போட்டி தன்மையுடனான கிரயத்துடன் செயற்திறான கொள்கைகள், நடைமுறைக் கோவை மற்றும் செயற்பாடுகளின் காலரீதியான தயாரித்தல் மற்றும் நிறுவன செயற்பணிக்குரிய வழங்கப்பட்டிருந்த பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகள், மதியுரையாளர்களைத் தெரிவு செய்தல் தொடர்பிலான வழிகாட்டல்களுக்காக பாராளு மன்றத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | உரிய செயற்பணியை நிறைவேற்றுவதற் கான அதிகாரம் கையளிக்கப்படும் சட்ட கட்டமைப்பு ஒழுங்கமைக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்த வழிகாட்டல் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சபைக்கு முன்வைக்கப்படாமையால் இச்சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அறிவித்திருந்ததுடன் இச்செயற்பாடு தாமதம் பெறுகை ஆணைக்கு சபைக்கு தவிர்க்க முடியாமல் இருந்த காரணத்தினால் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிட விரும்புகின்றேன் |

## 3.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

### 3.2.1 புதிய பெறுகை வழிகாட்டல் கோவையொன்றை தயாரித்தல் மற்றும் செயற்பாட்டு நிலைமைக்கு கொண்டு வரல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு 2 ஆண்டுகள் கடந்ததன் பின்னர் பொருட்கள், மற்றும் சேவைகள், வேலைகள், தகவல் முறைமைகள் என்பவற்றிற்காக மதியுரையாளர்கள் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதுல் தொடர்பாக புதிய பெறுகை கோவையின் இறுதி வரைவிற்கு ஆணைக்குழு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதன் பிரகாரம் உத்தேச புதிய பெறுகை விகாட்டல் மற்றும் கைநூல் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 3 மாதஙு களுக்குள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட இருந்த போதும் 2020 செப்தம்பர் மாதம் வரை அந்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு அங்கீகாரம் வழங்குவதன் மூலம் பெறுகை பொறிமுறையை மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறகாவும் செயற்படுத்த முடியும். | பொருட்கள், மற்றும் சேவைகள், வேலைகள், தகவல் முறைமைகள் என்பவற்றிற்காக மதியுரையாளர்கள் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பாக புதிய பெறுகை கோவையின் இறுதி வரைவிற்கு அமைச்சரவை அங்கீகாரத்துடனும் சட்டமா அதிபரின் இணக்கப்பாட்டுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளு மன்றத்தின் அங்கீகாரத் திற்காக சமர்ப்பிக்கப் பட்டிருந்த போதும் அது இதுவரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படாமை ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமொன்றாக தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) | அரச தனியார் பங்குடமை செயற்திட்டத்திற்காக பெறுகை வழிகாட்டல் தயாரித்தல், மருந்துகள் பெறுகைக்காக செயற்பாட்டு வழிகாட்டலொன்று தயாரித்தல், பசுமை பெறுகை கொள்கை தயாரித்தல் இதுவரை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவைகள் பெறுகை பொறி முறையை மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறகாவும் செயற்படுத்த முடியும். | 2018 ஆம் ஆண்டின் போது தனியாள் பங்குடமை தொடர்பான தேசிய முகவராண்மையால் (NAPP) தாபிக்கப்பட்டதன் பின்னர் ஆணைக்குழுவுடன் அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் பேரில் பங்குடமை செயற்திட்டமொன்றாக மீண்டும் அரச தனியார் பங்குடைமை செயற் |

திட்டத்திற்காக உரிய வழிகாட்டல்களின் வரைவாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பசுமை பெறுகை கொள்கை தயாரித்தல், சுற்றாடல் அமைச்சுடன் இணைந்த செயயற்பட வேண்டியதுடன் இதுவரை அந்த அமைச்சின் மூலம் பசுமை உற்பத்திகளுக்காக மதிப்பிடுவதற்கான நியதிகளை தயாரிக்காமை காரணமாக அவ்வாறான வழிகாட்டலொன்றை தயாரிப்பதற்கு தவறியிருந்தது.

## 3.3 அரசின் நிறுவனங்களில் செயல்நடவடிக்கைத் திட்டங்கள் மற்றும் பெறுகை திட்டங்கள் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அனைத்து அமைச்சுக்களின் செயல்நடவடிக்கைத் திட்டங்கள் மற்றும் பெறுகைகள் திட்டங்களை சேகரித்தல் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடுகள் வினைத்திறனாக இடம்பெறவில்லையென பின்வருமாறு குறிப்பிடலாம் | செயல்நடவடிக்கைத் திட்டங்கள் மற்றும் பெறுகைகள் திட்டங்களை சேகரித்தல் ஆணைக்குழு வின் செயற்பாடொன்றாக இருப்பதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்நோக்கங்கள் திட்டமிடப்பட்ட பெறுகை உரிய நிறுவனத்தின் நோக்கங்களுடன் இணங்குகின்றதா என நிச்சயிக்கப்பட்டு அப்பெறுகை நிறுவனத்தின் நோக்கங்கள நிறைவேற்றுவதற்கு உதவுகின்றதா என உறுதிப்படுத்துவதாகும். எவ்வாறாயினும் தற்போது செயற்படுத்தப்படும் வகையில் மிகவும் கூடுதலான கவனமொன்று அந்தந்த நிறுவனங்களின் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகை திட்டம் என்பவற்றை பெற்றுக் கொள்ள வேண்டுமென இந்த ஆணைக்குழுவாலும் அவதானிக்கப்பட்டுள்ளது. |

| ஆண்டு | அமைச்ச மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | கிடைத்த செயல் நடவடிக்கை திட்டங்கள் | கிடைத்த பெறுகை கை திட்டங்கள் |
|---|---|---|---|
| 2018 | 559 | 222 | 187 |
| 2019 | 512 | 218 | 249 |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆணைக்குழுவினால் 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டங்கள் மற்றும் பெறுகைகள் திட்டங்களை மீளாய்வு நடவடிக்கைகள் 19 நிறுவனங்கள் தொடர்பாக மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டு தொடர்பாக 11 நிறுவனங்களின் திட்டங்கள் மாத்திரம் மீளாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | மீளாய்வு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும் | - மேற்படி - |
| (இ) | ஆணைக்குழுவினால் 2017 ஆம் ஆண்டிற்குரிய 47 அமைச்சுக்களில் பூர்த்தி செய்யப்பட்ட 1471 பெறுகைகள், தொடர்பாக தெரிவுப் பரிசோதனையின் போது பரீட்சிப்பதற்காக 83 பெறுகைகள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் அதில் 30 பெறுகைகள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | பூர்த்தி செய்யப்பட்ட பெறுகைகள் தொடர்பாக பரீட்சித்தல் எதிர்வரும் பெறுகை நடவடிக்கைகள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ளக்கூடிய வகையில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | -மேற்படி- |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

----------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், மீளாய்வாண்டிற்குரியதாக தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவினால் தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை | நிகழ்ச்சி நிரலின் பிரகாரமும் சுற்றறிக்கையின் பிரகாரமும் செயற்பட வேண்டும். | அரசியலமைப்பின் 156ஈ (1) மற்றும் (2) ஆகிய உப உறுப்புரையின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள் நிறைவேற்றப் படுவதுடன் அரச நிறுவனங்களில் செயற்படுத்தப்படும் பெறுகை செயற்பாடு நியாயானதென நேர்மையானாகவும் கிரய செயற்திறன் மற்றும் |

| | | |
|---|---|---|
| அடைவதற்குரிய அடைவுகளும் இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | போட்டியுடனான விடயங்களை மேம்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் அச்செயற்பாடுகளின் ஊடாக மறைமுகமாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நோக்கி அரசின் பெறுகை செயற்பாடு செயற்படுவதாக அவதானிக்கின்றோம். எவ்வாறாயினும் ஆணைக்குழுவிற்கு அரசியலமைப்பில் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரம், செயற்பாடு மற்றும் பணிப்பொறுப்புக்கள் தவிர சட்ட ஏற்பாடுகள் இல்லையென்பதால் நிலைபேறான அபிவிருத்தி இலக்கிடப்பட்ட நேரடியான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த முடியாதென தயவுடன் அறிய தருகின்றேன். |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 40 (1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் | உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவின் நிலைத்திருத்தலுக்காக ஏற்பாடுகளின் பிரகாரம் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களினை நடாத்துதல் வேண்டும். | உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படாமையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களினை நடாத்த முடியாதுள்ளதுடன் உள்ளக கணக்காய்வாளரொருவரை நியமிப்பதற்கு தேவையான அங்கீகாரத்தை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து கோரப்பட்ட போதும் அதற்கான அங்ககீரம் கிடைக்கவில்லை. அதன் பிரகாரம் பணிப்பொறுப்பு அடிப்படையில் இச்சேவையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை அங்கீகரித்த பதவியணிக்காக 05 பேர் அமைய அடிப்படையிலும் 09 பேர் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர் அமைய அடிப்படையில் நியமிக்கப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக உத்தியோகத்தரொருவர் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்றின் பிரகாரம் அல்லாமல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தருக்கு 2019 ஆம் ஆண்டில் ரூபா 213,514 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதவியணி நியமனம் முறைப்படுத்தப் பட வேண்டும் | அரசியலமைப்பின் 156ஈ (1) உப உறுப்புரையின் பிரகாரம் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அந்நியமனங்களை மேற்கொண்டுள்ளதுடன் திரண்ட நிதியிலிருந்து சம்பளக் கொடுப்பனவை கருத்திற் கொண்டு முறைப்படி பதவியணியை அங்கீகரித்துக் கொண்டுள்ளதாக அறிய தர விரும்புகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆணைக்குழுவின் பெறுகை மேற்பார்வை அலகின் பதவியணி நிறைவேற்றுத் தரத்தின் 01 உத்தியோகத்தர் மற்றும் நிறைவேற்றுத் தரமல்லாத இரண்டு உத்தியோகத்தர்களுடன் உள்ளதால் அந்நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்வதற்கு போதியளவு பதவியணியினரொன்று இல்லை என அவதானிக்கப்பட்டது. | மேற்பார்வை நடவடிக்கைகள் சிறப்பாக மேற் கொள்வதற்காக போதியளவு பதவியணியொ ன்று இணைக்கப்பட வேண்டும். | செய்யப்பட வேண்டிய வேலைகள் தொடர்பான ஆய்வொன்று மேற்கொண்டு தேவையான பதவியணி அங்கீகரித்துக் கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. |